**கவனிக்க .-** *01.11.2013 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி* I : *தொகுதி* (III) *மற்றும் பகுதி* II *ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1836 - 2013 නොවැම්බර් මස 08 වැනි සිකුරාදා - 2013.11.08

*1836 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 08 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(*அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது*)


## பகுதி II – சட்ட சம்பந்தமானது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| சட்டங்கள் | - | பிசுக்கால் மால்சல்மாரின் நியமனங்கள் | - |
| சட்டமூலங்கள் | - | பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - | மரணசாதன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - | நொத்தாரிசுமார் பட்டியல் | - |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | 182 |
| கடனிறுக்க முடியாமைக்கான வழங்குகளின் அறிவித்தல்கள் | - | பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2013, நவெம்பர் மாதம் 29 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2013, நவெம்பர் மாதம் 15 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**பீ. எச். எல். வீ. டி சில்வா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# நானாவித அறிவித்தல்கள்

### மேல் மாகாண மேல் நீதிமன்றத்தில்

அதன் குடியியல் நியாயாதிக்க பிரயோகம்

பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தை இல. 46-2/1 2, லோறிஸ் வீதி, பம்பலபிட்டி, கொழும்பு 4, இலங்கையில் கொண்டுள்ள வேல்ட்கோல் ரெலிகொமினிகேஷன்ஸ் லங்கா (பிரைவேட்) லிமிட்டெட் விடயத்தில் ;

வழக்கு இல. : HC (Civil) 43/2013/(CO)

மற்றும்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் XII ஆம் பகுதியின் 270 (அ) மற்றும் அல்லது 270 (உ) மற்றும்/அல்லது 270 (ஊ) பிரிவின்கீழ் நீதிமன்றத்தின் மூலம் முடிவுக்கு கொண்டு வரும் விடயத்தில் ;

வேல்ட்கோல் ரெலிகொமினிகேஷன்ஸ் லங்கா (பிரைவேட்) லிமிட்டெட், இல. 46-2/1, 2 ஆவது லோறிஸ் வீதி, பம்பலபிட்டி, கொழும்பு 4, இலங்கை

................. மனுதாரர்.

மேற்குறிப்பிடப்பட்ட மனுதாரரினால் மேற்கூறப்பட்ட கம்பனியை முடித்துக்கட்டுவதற்கான மனுவானது 2013, புரட்டாதி 30 ஆந் திகதியன்று கொழும்பு வர்த்தக மேல் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தெனவும், அந்த மனுவானது 2013, மார்கழி 11 ஆந் திகதியன்று நீதிமன்றத்தின் முன்னிலையில் விசாரணை செய்யப்படுவதற்குப் பணிக்கப்பட்டுள்ளதெனவும் சொல்லப்பட்ட கம்பனியின் கடன்காரர்கள் அல்லது பங்களிப்பவர்கள் எவரேனும் சொல்லப்பட்ட மனு மீது கட்டளையிடப்படுதலை ஆதரிக்கும் அல்லது எதிர்க்கும் விருப்பம் உடையவர்கள் விசாரணை நேரத்தில் நேரடியாக தானே அந்நபராக அல்லது அவரின்/அவர்களின் ஆலோசகர் மூலமாகவோ அல்லது பதிவுசெய்யப்பட்ட சட்டத்தரணி மூலமாகவோ தோற்றலாம் எனவும், சொல்லப்பட்ட கம்பனியின் கடன்காரர்கள் அல்லது பங்களிப்பவர்கள் எவருக்கும் இந்த மனுவின் பிரதி தேவைப்படுமாயின் கீழே கையொப்பமிட்டவரினால் அதற்குரிய விதித்துரைக்கப்பட்ட கட்டணத்தைச் செலுத்துவதன் மூலம் அப்பிரதியைப் பெற்றுக் கொள்ளலாம் எனவும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

திரு. உதய தம்மிக்க கபடகே,
சட்டத்தரணி,
இல. 272, பாஞ்சாலை வீதி,
தலபத்பிட்டிய, நுகேகொடை.

**குறிப்பு**.- சொல்லப்பட்ட மனு விசாரணையின் போது நேரில் தோற்றுவதற்கு எண்ணும் எவரேனுமாள் அவ்வாறு செய்யும் தமது எண்ணம் பற்றிய அறிவித்தலை எழுத்துமூலமாக கீழே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள சட்டத்தரணி திரு. உதய தம்மிக்க கபடகே அவர்களிடம் நேரில் சமர்ப்பித்தலோ அல்லது அஞ்சலில் அனுப்புதலோ வேண்டும். இந்த அறிவித்தலில் சம்பந்தப்பட்ட ஆளின் பெயர், முகவரி என்பன தரப்படுவதுடன் சம்பந்தப்பட்ட ஆளினால் அல்லது அவரது அல்லது அவர்களின் பதிவுசெய்யப்பட்ட சட்டத்தரணியால் (எவரேனுமிருப்பின்) ஒப்பமிடப்பட்டு நேரடியாக அல்லது அஞ்சலில் அனுப்பப்படல் வேண்டும். அஞ்சலில் அனுப்பப்படுமாயின் 2013, மார்கழி 10 ஆந் திகதி மாலை 6.00 மணிக்குப் பிந்தாமல் மேலே பெயர் குறிப்பிடப்பட்டவர் வசம் வந்து சேரும் வகையில் போதிய கால அவகாசத்துடன் அஞ்சல் செய்யப்படல் வேண்டும்.

உதய தம்மிக்க கபடகே,
சட்டத்தரணி.

11-168

---

### 1996 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க மாகாணங்களின் உயர் நீதிமன்றத்தின் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளை மூலம் சிவில் நியாயாதிக்கத்துடன் அதிகாரமளிக்கப்பட்ட மேல் மாகாணத்துக்கான அரசியலமைப்பின் 154(பீ) என்னும் உறுப்புரையின் கீழ் தாபிக்கப்பட்ட மேல் நீதிமன்றத்தில்

மல்வத்த ஹோட்டல்கள் மற்றும் ரிசொட்ஸ் (பி) லிமிட்டட் என்னும் விடயத்திலும் ;

வழக்கு இல. : உ. நீ. (சிவில்) 45/2013/(CO)

அத்துடன்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் விடயத்திலும்;

மல்வத்த ஹோட்டல்கள் மற்றும் ரிசொட்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட், இல. 280, டாம் வீதி, கொழும்பு 12.

................. மனுதாரர்.

இல. 280, டாம் வீதி, கொழும்பு 12, மல்வத்த ஹோட்டல்கள் மற்றும் ரிசொட்ஸ் (பிரைவேட்) லிமிட்டட்டினால் சொல்லப்பட்ட நீதிமன்றத் துக்குச் சமர்ப்பிக்கப்பட்ட 2013, ஒற்றோபர் மாதம் 04 ஆந் திகதியன்று கொழும்பில் நடத்தப்பட்ட (வர்த்தக உயர் நீதிமன்றம்) மேல் மாகாண உயர் நீதிமன்றத்தினால் மேலே பெயர் குறிப்பிடப்பட்ட கம்பனியை ஒடுக்குவதற்கான மனு ஒன்று இத்தால் கொடுக்கப்படுகிறது என்பதற்கான அறிவிப்பு.

அத்துடன் சொல்லப்பட்ட மனுவானது, 2014, சனவரி 24 ஆந் திகதியன்று நீதிமன்றத்தின் முன் விசாரிக்கப்படும் எனப் பணிக்கப் படுகிறது.

சொல்லப்பட்ட மனுமீது ஆக்கப்படும் கட்டளையொன்றை ஆதரிக்க அல்லது எதிர்க்க விரும்புகின்ற சொல்லப்பட்ட கம்பனியின் எவரேனும் கடன்கொடுத்தவர் அல்லது உதவுநர், அந்நோக்கத்துக்காகத்தான் நேரிலோ அல்லது அவரது சட்டத்தரணியினாலோ, வழக்கு விசாரிக்கப்படும்போது நீதிமன்றத்தில் தோன்றலாம்.

அதற்கு விதித்துரைக்கப்பட்ட கட்டணத்தைச் செலுத்தியதன் மூலம் கீழே ஒப்பமிடப்பட்டவரால் அதைத் தேவைப்படுத்துகின்ற சொல்லப் பட்ட கம்பனியின் எவரேனும் கடன்கொடுத்தவருக்கு அல்லது உதவுநருக்கு மனுவின் பிரதியொன்று கொடுக்கப்படும் :-

போல் ரத்நாயக்க அசோசியேட்ஸ்,
சட்டத்தரணிகள்,
59, கிறகறீஸ் வீதி.
கொழும்பு 07.

**குறிப்பு**.- சொல்லப்பட்ட மனு விசாரிக்கப்படும் போது தோன்றுவதற்கு முற்படுகின்ற ஆள் எவரும், அவ்வாறு தாம் செய்வதற்கு எண்ணம் கொண்டுள்ளதாக எழுத்தில் அறிவித்தலை மேலே பெயர் குறிக்கப்பட்ட சட்டத்தரணிகள் போல் ரத்நாயக்க அசோசியேட்ஸ் என்பவர்களுக்கு சேர்ப்பித்தல் வேண்டும். அல்லது தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். 1939 ஆம் ஆண்டின் கம்பனிகள் ஒடுக்குதல் விதிகளின் 9 ஆம் படிவத்தில் தரப்பட்டுள்ளவாறு விதித்துரைக்கப்பட்ட முறைப்படி அறிவித்தல் இருத்தல் வேண்டும் என்பதுடன் அதில் ஆளின் பெயரையும் முகவரியையும் அல்லது குழுமமொன்றாக இருந்தால் குழுமத்தின் பெயரையும் முகவரியையும் குறிப்பிடுதல் வேண்டும் என்பதோடு அது அந்த ஆளினால் அல்லது குழுமத்தினால் அல்லது அவர்களின் சட்டத்தரணியினால் (அப்படி எவரும் இருப்பின்) கையொப்பமிடப்படுதல் வேண்டும் என்பதோடு கடன்கொடுத்தவராக இருந்தால் வருமதியான தனிசுத் தொகையையும் உதவுநராக இருந்தால் அவரால் வைத்திருக்கப்படும் பங்குகளின் எண்ணிக்கையையும் குறிப்பிடுதல் வேண்டும். சொல்லப்பட்ட அறிவித்தலானது சேர்ப்பிக்கப்பட்டால் அல்லது தபாலில் அனுப்பப்பட்டால், 2014, சனவரி 23 ஆந் தேதியன்று பிற்பகல் 6 மணிக்குப் பிந்தாமல் மேலே பெயர் குறிப்பிடப்பட்டவர்களை அடையும் வண்ணம் போதுமான அளவு நேரத்துடன் அனுப்பப்படுதல் வேண்டும்.

போல் ரத்நாயக்க அசோசியேட்ஸ்,
சட்டத்தரணிகள்.

11-318

## இலங்கை தொழில்சார் வங்கியாளர் சங்கத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

ரொசான் ரணசிங்க ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் 48 (1) ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ''இலங்கை தொழில்சார் வங்கியாளர் சங்கத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்'' எனப்படும் சட்டமூலமொன்றை பாராளுமன்றத்தில் அறிமுகம் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

பின்வரும் பொதுக் குறிக்கோள்களைக் கொண்ட மேற்குறித்த சங்கத்தைக் கூட்டிணைப்பதே இச்சட்டமூலத்தின் நோக்கமாகும் :-

(1) இலங்கையில் ஸ்திரமான வங்கிக் கட்டமைப்பொன்றை பேணுவதற்கு உதவுதல் ;

(2) இலங்கைக்குள் அல்லது வெளியில் வங்கித் தொழில் மற்றும் நிதிசார் சேவைகள் ஆகிய துறைகளை பொறுப்பேற்று மேம்படுத்தி கற்கைகளுக்கு அனுசரணை வழங்குதல் ;

(3) வங்கித் தொழில் மற்றும் நிதிசார் சேவைகள் மற்றும் சம்பந்தப்பட்ட விடயங்கள் போன்ற துறைகளுக்கு பரிசில்கள் மற்றும் புலமைப்பரிசில் அல்லது வேறு ஏதும் உதவிகளை வழங்கி கற்கைகளையும் ஆய்வுகளையும் ஊக்குவித்தல் ;

பிறவும்.

ரொசான் ரணசிங்க,
பாராளுமன்ற உறுப்பினர்.

11-341

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.